# NFTE - BSNL, சென்னை தொலைபேசி

தேசிய தொலைத் தொடர்பு ஊழியர் சம்மேளனம் நடத்தும்

## "போனஸ்" ஆர்ப்பாட்டம் (26.09.2008)

**அண்ணாசாலை தொலைபேசி நிலையம்**

**மதியம் 1.00 மணி அளவில்**

அருமைத் தோழரே!

இவ்வாண்டின் 'போனஸ்' இதுவரை அறிவிக்கப்படவில்லை. நிர்வாகம் வேண்டுமென்றே தாமதம் செய்கிறது. நிதிநிலை மற்றும் இலாபக் குறைவை காரணம் காட்டி போனஸை மறுப்பதற்கும், குறைப்பதற்கும் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. ஊழியருக்கு கிடைக்கவேண்டிய நியாயமான போனஸை தாமதமின்றி வழங்கக் கோரி நமது சம்மேளனம் 26.09.2008 அன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்திற்கு அறைகூவியுள்ளது. இதன்படி சென்னையில் நமது சம்மேளனத்தின் சார்பில் அண்ணாசாலை தொலைபேசி நிலையத்தின் முன்பு நாளை (வெள்ளிக்கிழமை) மதியம் 1 மணி முதல் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறும். அனைவரும் பங்கேற்று அதனை வெற்றிகரமாக்க வேண்டுகிறோம்.

மத்தியஅரசும், பி.எஸ்.என்.எல். நிர்வாகமும் தனியார் தொலைபேசி நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், இலாப அதிகரிப்புக்கும் வழி செய்திட கடந்த மூன்றாண்டுகளாக பி.எஸ். என்.எல்-ன் வளர்ச்சியிலும், விரிவாக்கத்திலும் அக்கறையற்று அலட்சியம் காட்டின. இப்பொழுது இலாபம் குறைந்து விட்டது; வருமானம் சிறுத்துவிட்டது என காரணம் கூறி அவை ஊழியரின் போனஸில் கைவைக்க முயற்சிக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திடம் இவ்வாண்டு போனஸ் வேண்டாம் என எழுதி தரும்படி நிர்வாகம் நிர்பந்திப்பதாக ஒரு தகவல். மேலும் கடந்த ஆண்டு வழங்கிய பத்தாயிரம் ரூபாயைக் கூட குறைந்த பட்ச போனஸாக வழங்கிட நிர்வாகம் மறுப்பதாகவும் செய்தி. இதனால் நமது ஊழியர்கள் தான் பெரும் இழப்புக்கு ஆளாவார்கள் என்பது தெளிவு. கடந்த ஆண்டே அதிகாரிகளுக்கு போனஸ் தொகையை இரண்டு மடங்கு உயர்த்தியது போல ஊழியருக்கும் ரூ. 14,000- குறைந்த பட்ச போனஸாக வழங்கப்பட வேண்டுமென NFTE–BSNL கோரியது; இயக்கங்களும் நடத்தியது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் குறைந்த தொகையை ஏற்றுக் கொண்டதால் பத்தாயிரம் ரூபாய் தான் போனஸாக ஊழியருக்கு கிடைத்தது. ஆனால் அதிகாரிகளோ ரூ. 35,000/- வரை போனஸ் பெற்றனர். இந்த பாரபட்சம் இவ்வாண்டும் நீடிக்க அனுமதிக்கக் கூடாது.

போனஸ் என்பது கொடுபடா ஊதியமே (Deferred Wase) என்ற கோட்பாடு கைவிடப்பட்டுவிட்டது. இலாபத்தில் இயங்கினாலும் இல்லையானாலும் குறைந்த பட்ச போனஸாக 8.33 சதவிகிதம் (ஒரு மாத ஊதியம்) வழங்க வேண்டும் என்பதும் மறக்கடிப்பட்டுவிட்டது. வருமானம் உயராததற்கு அரசின் கொள்கைகளும் தனியார் நிறுவனங்களுக்கு அனுசரணையான அதன் அணுகு முறையும் தான் காரணம். இதற்காக ஊழியரின் போனஸ் உரிமையில் அது கைவைப்பதை அனுமதிக்க முடியாது.

***ஆர்த்தெழுவோம்! ஆர்ப்பரிப்போம்! அணிதிரள்வோம். வெற்றி நமதே!***

> தோழர் சி.கே. எம். புதுடெல்லி செல்வதால்
> அக்டோபர் மாதத்தின்
> **பொதுக்குழு கூட்டம்**
> 7.10.20008 (செவ்வாய்) மதியம் 2 மணிக்கு
> நடைபெறும்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

25/9/08

(சி.கே.மதிவாணன்)
சம்மேளச் செயலாளர்
தேசிய தொலைத் தொடர்பு ஊழியர் சம்மேளனம்
செல் : 9444011717